දුරකථන 2698471
தொலைபேசி 2698475
Telephone 2698490
2698507

ෆැක්ස්
பெக்ஸ் 2693866
fax

විද්‍යුත් තැපැල :
மின்னஞ்சல்


සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

සෞඛ්‍ය, පෝෂණ හා දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
சுகாதார, போசாக்கு மற்றும் சுதேசவைத்திய அமைச்சு
Ministry of Health, Nutrition & Indigenous Medicine

මගේ අංකය
எனது இல.
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி 2016. 01. ~~04~~ 19

பொது சுற்றுநிருபம் இல: 01 - 04 /2016

சகல சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர்களுக்கும்,

சகல பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கும்,

சகல பணிப்பாளர்கள் / மருத்துவ மேலதிகாரிகள் / வைத்திய சாலைகளுக்கு பொறுப்பான மருத்துவ உத்தியோகத்தாகள்

சகல நிறுவனங்களின் தலைவர்களுக்கும்,

## திரிபோஷ பயனாளிகளை தெரிவு செய்தலும் மற்றும் திரிபோஷவை பகிர்ந்தளித்தலும்

திரிபோஷ ஆனது கர்ப்பிணித்தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் குறைபோசாக்கு காணப்படும் குழந்தைகளின் போசாக்கு மட்டத்தினை உயர்த்துவதற்கான அதியுயர்ந்த போசாக்குடையதொரு மருத்துவ ஆலோசனையுடன் இலவசமாக விநியோகிக்கப்படும் ஒரு குறைநிரப்பு உணவாகும். திரிபோஷ சோளம், சோயா அவரை, முழு ஆடைப்பால்மா, விற்றமின் மற்றும் கனியுப்புகலவை போன்றவற்றை உள்ளீட்டு பொருட்களாக கொண்டதாகும்.

திரிபோஷ நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான குறிக்கோள் போசாக்கு குறைபாடுகளைக் கொண்ட இலக்கு குழுவினர்க்கு வழக்கமான பிரதான உணவுகளிலிருந்து கிடைக்கப்பெறாத போசாக்கு தேவைகளை ஈடுசெய்வதாகும். இந் நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளை அடைவதற்கு உங்கள் ஒத்துளைப்பு மிகவும் பாராட்டதக்கது. தயவுசெய்து கீழ் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றுவதுடன் அதற்கேற்ப உங்கள் அலுவலர்களை அறிவூட்டுங்கள்.

1) திரிபோஷ பயனாளிகளை தெரிவுசெய்தல்

1. எல்லா கர்ப்பிணித்தாய்மார்கள்

2. எல்லா பாலூட்டும் தாய்மார்கள் (முதல் ஆறு மாதங்கள் வரை)

3. குறை போசாக்குடைய குழந்தைகள் (6 மாதங்கள் தொடக்கம் ஐந்து வருடங்கள் வரை)

   அ) குழந்தையின் வயதிற்கு ஏற்ற நிறை வரைபில் -2SD க்கு கீழ் காணப்படுவோர்.

   ஆ) குழந்தையின் வளர்ச்சி நீண்ட காலமாக வீழ்ச்சியுற்று காணப்படல் (குழந்தையின் வளர்ச்சிக்கண்காணிப்பு சுகாதார பதிவேட்டில் 3 மாதங்கள் தொடர்ச்சியாக வளர்ச்சி வீழ்ச்சியுற்று காணப்படல் (CHDR).

   இ) குழந்தையின் உயரத்திற்கு ஏற்ற நிறை -2SD க்கும் -3SD இடையே காணப்படுவோர்.

ஒரு முறை குழந்தையின் நிறை சாதாரண நிறைக்கு வரின் திரிபோஷ மேலதிக மூன்று மாதங்களுக்கு தொடர்ந்து கட்டாயமாக வழங்குதல் வேண்டும்.

முக்கியமானவை

- குழந்தையின் உயரத்திற்கேற்ற நிறை வரைபில் -3SD க்கு கீழ் காணப்படின் அவர்களை கட்டாயமாக குழந்தைநல வைத்திய நிபுணரிடம் பிரத்தியேக உணவூட்ட சிகிச்சைக்காக அனுப்புதல் வேண்டும்.
- மேற்குறித்த வகையினர்களைத் தவிர எவரையும் திரிபோஷ பயனாளிகளாக கணிப்பிடவேண்டாம். இலக்கு குழுக்கள், யார் சிபாரிசு செய்யப்பட்ட திரிபோஷ பங்கீட்டினை பெற்றுக்கொள்கிறார்களோ அவர்களுக்கு வேறு குறைநிரப்பு உணவு தேவையில்லை. இருப்பினும் திரிபோஷ ஒரு குறை நிரப்பு உணவாக மட்டும் இருப்பதால் போசாக்குள்ளதொரு சம உணவு பழக்கத்திற்கு பயனாளிகளை கட்டாயமாக ஊக்குவித்தல் வேண்டும் (உ.ம்: பிரதான உணவுகள், தாய்ப்பாலூட்டலுடன் குறைநிரப்பு உணவூட்டல்).

2. திரிபோஷ விநியோகம்

1. மாதாந்தம் பயனாளி ஒருவருக்கான உரிமையுடைய திரிபோஷ (நாளொன்றிற்கு 50 கிராம்) 1500கிராம் (750 கிராம் X 2 பைக்கற்றுக்கள்).

2. உங்கள் நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளும் மாதாந்த இருப்பினை கட்டாயமாக சரியானதொரு முறையில் களஞ்சியப்படுத்திவையுங்கள் மற்றும் இயலுமானவரை தாமதமின்றி விரைவாக பயனாளிகளுக்கு வழங்குங்கள்.

3. எலி, பூச்சி, கறையான் மற்றும் வேறு பூச்சிகள் மூலம் திரிபோஷ கெட்டுப்போகும் மற்றும் பாதிப்புக்குள்ளாகும் நிலையினை குறைப்பதற்கு சுத்தமாக பாதுகாப்பான களஞ்சியப்படுத்திவைக்கும் வசதிகளை அதனை பயனாளிகளுக்கு வநியோகிக்கும்வரை ஏற்படுத்தி கொடுத்தல் வேண்டும்.

4. திரிபோஷ இருப்புக்களை கட்டாயமாக ஒரு முறையில் விநியோகித்தல் வேண்டும் அதாவது பளைய இருப்புக்களை கட்டாயமாக முன்னதாக வநியோகித்தல் வேண்டும். புதிய இருப்புக்களை கெட்டுப்போன அல்லது பாதிப்புக்குள்ளான பொதிகளுடன் கட்டாயமாக களஞ்சியப்படுத்தாதீர்கள்.

   கெட்டுப்போன அல்லது சேதமுற்ற திரிபோஷ பொதிகள் இருப்பின் விரைவாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறிவியுங்கள். அவரால் நியமிக்கப்பட்ட குழு கட்டாயமாக அதனை ஆய்வு செய்து கட்டாயமாக ஒரு அறிக்கை சமர்ப்பிக்கும் அதற்கிணங்க பொது 47 படிவம் பூர்த்திசெய்யப்படும் அதனை கட்டாயமாக இலங்கை திரிபோஷ நிறுவனத்திற்கு அனுப்பி கையிருப்பினை அழித்துக் கொள்வதற்கான அனுமதியை கட்டாயமாக பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

5. உங்களுக்கான அடுத்த ஒதுக்கீட்டினை பெறுவதற்கு மாதாந்த பயனாளிகள் பட்டியல் அறிக்கையினை (MBI) கட்டாயமாக பூர்த்தி செய்தல் வேண்டும் அதனை இலங்கை திரிபோஷ நிறுவனத்திற்கு தொடர்ந்துவரும் மாதத்தின் 10ம் திகதிக்கு முன்னதாக அனுப்புதல் வேண்டும.

சுகாதார, போசாக்கு மற்றும் சுதேசவைத்திய அமைச்சு திரிபோஷ நிகழ்ச்சித்திட்டத்திற்காக வருடாந்தம் 2500 மில்லியன் ரூபா செலவிடுகின்றது. எனவே கர்ப்பிணித்தாய்மார் மற்றும் குழந்தைகளில் காணப்படும் குறைபோசாக்கினை இலங்கையில் குறைப்பதற்கு இந் நிகழ்ச்சித்திட்டத்தை தாக்கமுள்ளதாக அமுல்படுத்துவது உங்கள் கடமையும் மற்றும் பொறுப்புமாகும்.

Dr. P. G. Mahipala
Direct... Services
Ministry of ... Medicine
38... Thero Mw.

....................................
வைத்தியர். பி.யி. மகீபால
சுகாதார சேவைாள் பணிப்பாளர் நாயகம்